**ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை – 600 006**

**பத்திரிக்கை செய்தி**

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் 2017-18 ஆம் ஆண்டுக்குரிய அரசுப் பல்தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனத்திற்கான பணித் தெரிவு சார்ந்து அறிவிக்கை (அறிவிக்கை எண். 14/2019) 27.11.2019 அன்று வெளியிடப்பட்டது. மேலும், online வாயிலாக விண்ணப்பங்கள் மற்றும் கல்வித் தகுதி தொடர்புடைய ஆவணங்களும் பெறப்பட்டன. தற்போது விண்ணப்பதாரர்களின் கூடுதல் கல்வித் தகுதிகள், பணி அனுபவச் சான்றிதழ், நன்னடத்தை சான்றிதழ் மற்றும் பிற சான்றிதழ்களை Online வாயிலாகக் கூடுதலாகப் பதிவேற்றம் செய்வதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு (11.03.2022 முதல் 25.03.2022 வரை) ஆவணங்கள் பெறப்பட்டு வருகின்றன. தற்பொழுது இக்காலக்கெடுவானது 25.03.2022 -லிருந்து 01.04.2022 வரை நீட்டிக்கப்படுகிறது என விண்ணப்பதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும்,

1. Login ID மற்றும் Password பயன்படுத்துவது தொடர்பாக 440 பணிநாடுநர்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் குறித்து சார்ந்த மென்பொருள் நிறுவனத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவை சரிசெய்யபட்டுள்ளன.
2. மேலும், 240 பணிநாடுநர்கள் தாங்கள் இறுதியாகப் பயின்ற கல்வி நிறுவனத்தில் பெற்ற மாற்றுச்சான்றிதழில் (Transfer Certificate) நன்னடத்தை (Conduct) பற்றிய விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதால் தனியாக நன்னடத்தை சான்றிதழ் (Conduct Certificate) பெறவேண்டுமா எனக் கோரிக்கை வைத்திருந்தனர்.

   ஆசிரியர் தேர்வு வாரியக்குழுக் கூட்ட முடிவின்படி நன்னடத்தை (Conduct) பற்றிய விவரம் மாற்றுச் சான்றிதழில் (Transfer Certificate) குறிப்பிடப்பட்டிருந்தால் அம்மாற்றுச் சான்றிதழையே (Transfer Certificate) நன்னடத்தை சான்றிதழாகக் கருதி அதனை பதிவேற்றம் செய்யலாம் என முடிவெடுக்கப்பட்டு அதன் விவரம் சார்ந்த

விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் மின்னஞ்சல் முகவரி வாயிலாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இதேபோல, விண்ணப்பதாரர்களின் பிற கோரிக்கைகள் (Application Correction, Other State Colleges / Universities experience, Foreign University experience, etc.) பரிசீலிக்கப்பட்டு உரிய பதில் அவர்களின் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு மின்னஞ்சல் வாயிலாகக் கோரிக்கைகள் அனுப்பியுள்ள பணிநாடுநர்கள் தங்களது மின்னஞ்சல் முகவரிக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து பதில் பெறப்பட்டுள்ளதா என்பதை அவ்வப்போது உறுதி செய்து கொள்ள தெரிவிக்கப்படுகிறது.

நாள் : 24.03.2022

**தலைவர்**